## இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் - 2015

---

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் மஹோபாத்தியாய அவர்களுக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அரசாங்கத்தின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்காக கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத்தேய்வின் அளவு ரூபா 7,239,500 ஆகக் கணக்குக் குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் கீழ் அப்பெறுமானம் ரூபா 7,399,500 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 160,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பபட்டிருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டுகளுக்குரிய திரண்ட பெறுமானத்தேய்வுக்குரிய குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 20,416,667 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் ரூபா 20,643,333 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 226,666 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து வருடங்களை விட பழைமையான ரூபா 10,446,752 கூட்டுத் தொகையான பிடி காசினை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது தீர்த்து வைப்பதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு கரப்பந்தாட்ட விளையாட்டரங்கொன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டின்போது ரூபா 233,174 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் உரிய முற்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனவிதிக் கோவையின் 20 ஆம் அத்தியாயத்தின் 3-1 ஆம் பிரிவு மற்றும் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வருகை, வெளிறேல் மற்றும் விடுமுறை என்பவற்றை உறுதிப்படுத்தாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 65,603,821 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | 4 உத்தியோகத்தர்களுக்கு 5 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 147,750 கூட்டுத்தொகையான முற்பணம் 07 நாட்கள் முதல் 94 நாட்கள் வரையிலான காலமொன்று கையில் வைத்திருந்ததன் பின்னர் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(அ)(ஆ) | செயல்நிமித்த முற்பண எல்லையினை விஞ்சி 4 உத்தியோகத்தர்களுக்கு 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,509,850 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயல்நிமித்த முற்பணங்களுக்குரிய பணிகள் நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், பத்து சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 462,108 தொகை தீர்க்கப்படாதிருந்ததுடன், 5 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 221,600 தொகையான முற்பணத்தைத் தீர்த்தல் 12-54 நாட்கள் வரையான கால வீச்சில் தாமதமாகியிருந்தது. |
| (iv) நிதிப்பிரமாணம் 756 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 36,960,804

பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,626,061 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகள் ரூபா 34,334,743 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. சம்பளம் மற்றும் ஏனைய படிகள் ரூபா 44,104,317 இனால் அதிகரித்தமை அதற்குப் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகளில் தொடர்ச்சியாக பற்றாக்குறையொன்றைக் காண்பித்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் கவனத்தில் கொள்ளும் போது பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2011 ஆம் அண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை நேர்ப் பெறுமதியாக இருந்ததுடன் அது தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 192,617,441 ஆக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பௌத்த சமயத்தைப் பரப்புதல் மற்றும் தர்ம உபதேசங்களை போதிப்பதற்காக பௌத்த தர்மம் மற்றும் நல்லொழுக்கம் தொடர்பாக கலையொன்றைப் பயிற்றுவித்தல், பாளி மொழி, பௌத்த கலாசாரம் மற்றும் பௌத்த கண்காட்சிகளை ஏற்படுத்தி மேம்படுத்தல் மற்றும், தற்போதைய உலக தரத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அக் கல்வியைக் கட்டியெழுப்புதல், பிரிவெனாக்களிலும், பாடசாலைகளிலும் அதற்குச் சமமான நிறுவனங்களிலும் புத்தசமயம் மற்றும் பாளி மொழிகளைக் கற்பித்தலுக்காக பிக்கு மாணவ தேரர்களையும் இளம் ஆண் பிக்கு மாணவர்களையும் பயிற்றுவித்தல் போன்ற பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 1981 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் பிரிவினால் முன்னைய ஆண்டின் போது 444 பொதுப் பட்டங்களும், 11 பட்டப்பின் டிப்ளோமாக்களும் 124 பட்டப்பின் பட்டங்களும் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 121 பட்டப்பின் பட்டங்களும் 5 பட்டப்பின் டிப்ளோமாக்களும் மாத்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், பொதுப்பட்டம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வளங்களிலிருந்து கூடுதலான அளவொன்று பயன்படுத்தப்பட்டு நடாத்தப்படும் உள்வாரி பட்டம் கையளித்தமையுடன் ஒப்பிடும் போது வெளிவாரி பட்டம் வழங்கல் மிகவும் கூடிய மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் கடந்த 5 வருடங்களில் 1800 வெளிவாரி பட்டங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப் பகுதியில் வழங்கப்பட்ட உள்வாரி பட்டங்களின் எண்ணிக்கை 368 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக 350 மாணவர்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 289,950,228 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் 359 மாணவர்களுக்காக செலவிடப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 235,642,269 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் ஒரு மாணவருக்கான கிரயம் முறையே ரூபா 828,429 மற்றும் ரூபா 656,385 ஆக இருந்ததுடன் அது 26 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணம் வழங்கப்பட்டு 3 முதல் 6 வருடங்களுக்கிடையிலான காலத்தை விஞ்சிய ரூபா 1,367,386 தொகைக்குரிய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து இந்த முற்பணத் தொகை மற்றும் செயலாற்றல் பிணை முறிகளை அறவிடுவதற்கோ அல்லது சட்ட ரீதியான படிமுறைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் iii ஆவது அத்தியாயத்தின் 26.1 ஆம் உப பிரிவின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனத்தின் மூலம் ஏனைய நிறுவனங்களிலிருந்து வெளிவாரி விரிவுரையாளர்களைப் பெற்றுக் கொள்ளும் வழக்கத்தை ஆர்வமூட்டக்கூடாது எனக் காண்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் 44 விரிவுரையாளர் பதவிகளை மிகைத்து 30 வெளிவாரி விரிவுரையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,694,623 படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புலமைப்பரிசில் மற்றும் பரிசு நிதிய முதலீட்டு சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 2,424,883 ஆக இருந்ததுடன் அத்தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படாது சேமிப்பு வைப்பொன்றாக பேணிச்செல்லப்பட்டிருந்தது.

(ஆ) பௌத்த கற்கைக்கும் பாளி மொழிக்கும் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிகளுக்குரிய நிதியுதவி வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட ஜீயூன் பௌத்த ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு நிதியம் 2006 ஆம் ஆண்டின் பின்னர் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக ரூபா 264,084 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியின் போது நிதியத்தின் மீதி ரூபா 1,870,138 ஆக இருந்தது.

**4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பல்கலைக்கழகத்தில் மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்படுகின்ற அரசாங்க மூலதன மானியத்தின் பயன்பாடு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட மூலதன மானியம் ரூபா 22 மில்லியன் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 99.2 மில்லியனில் ரூபா 60 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாத மொத்த மூலதன மானியம் ரூபா 61 மில்லியனை விஞ்சியிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட விடுதிக் கட்டிடத்தில் 208 மாணவர்களுக்கு இடவசதிகள் வழங்க முடியுமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் 30 வெளிநாட்டு

மாணவர்களுக்கும் 25 உள்ளூர் மாணவர்களுக்கும் மாத்திரம் இடவசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 220 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 242,960 பெறுமதியான 20 வகையான பொருள் விடயங்கள் 2 வருடம் முதல் 12 வருடம் வரையிலான கால வீச்சில் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

பல்கலைக்கழகத்தின் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் மரப்பொருட்கள், உபகரணங்களை உள்ளடக்கிய 201 பொருள் விடயங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 4,671,162 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 21,691,676 கிரயத்திற்குரிய 682 பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிறுவனத்தின் தேவை இனங்காணப்படாமலும் தேவையான எதிர்வு கூறல்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமலும் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்தபோது 11 விடயங்களில் 16 சதவீதம் முதல் 291 சதவீதம் வரை சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் மஹோபாத்தியாய அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாகப் பேணப்பட்டிருக்காமை |
| (ஆ) | களஞ்சியக் கட்டுப்பாடு | 2006 இன் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்காமை |